பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**28 01 2026** **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டு நலனை மட்டுமே கருத்தில்கொண்டு நமது இளையோர் துணிச்சல் மற்றும் உறுதிபாட்டுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் இன்றைய செயல்பாடுகள் ஏற்புடையதல்ல என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் உழவர் உற்பத்திக்குழுக்களை வலுப்படுத்தவதற்காக உயர்நிலைக் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

4. பாகிஸ்தானில் மின்னணு குற்றங்கள் தடை சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

5. டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

--இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

நாட்டு நலனை மட்டுமே கருத்தில்கொண்டு நமது இளையோர் துணிச்சல் மற்றும் உறுதிபாட்டுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படையின் வருடாந்திர பேரணியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

தேசிய மாணவர் படை, இயக்கமாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகமே நமது இளையோரை நம்பிக்கையுடன் உற்று நோக்குவதாகவும் அவர் கூறினார்.

நமது இளையோரின் திறன் மற்றும் கலாச்சாரம் காரணமாக இது சாத்தியமாயிற்று என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய மாணவர் படை தற்போது 25 லட்சம் பேரை கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதில் மகளிர் பங்களிப்பு அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் இன்றைய செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குடியரசுத் தலைவர் உரையாற்றியபோது, காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் நடந்துகொண்ட விதம் ஏற்புடையது அல்ல என்றார்.

இதனை நாட்டு மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சுற்றுச்சூழல் பாதிப்புகளை களைவதற்கு அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

தொழில்நுட்ப மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் தொடர்பான உச்சிமாநாட்டை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் இதில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த உச்சிமாநாட்டில் பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கையின் பிரதிநிதிகள் பங்கேற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் உழவர் உற்பத்திக்குழுக்களை வலுப்படுத்தவதற்காக உயர்நிலைக் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் அண்மையில் ஈரோடு பயணம் மேற்கொண்டபோது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நபார்டு வங்கி, திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையம் மற்றும் வேளாண் துறையின் அதிகாரிகள் இந்த குழுவில் இடம்பெறுவார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

சிறைக் கைதிகளின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு **Bandi Sanjay Kumar** கூறியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில், சிறை நிர்வாகம் தொடர்பான தேசிய கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

சிறைச்சாலைகள் மாநில அரசின் பட்டியலில் வந்தபோதிலும், சிறைக் கைதிகளின் நலனுக்காக 150 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏழை சிறைக் கைதிகளுக்கு உதவும் வகையில் வருடந்தோறும் **20** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் திரு **Bandi Sanjay Kumar** கூறினார்.

<<<<<<<>>>>>>

எஃகு துறை தொடர்பான பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கான ஆலோசனைக் கூட்டத்திற்கு மத்திய அரசு அடுத்த மாதம் **2**-ஆம் தேதி அழைப்பு விடுத்துள்ளது.

எஃகு நிறுவனங்கள் மற்றும் துறைசார் சங்கங்கள் இதில் பங்கேற்கலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில பங்கேற்க விரும்புவோர் **Techsteel@nic.in** என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்புகொள்ளுமாறு அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான நெறிமுறைகளில் மத்திய அரசு மாற்றங்களை அறிவித்துள்ளது.

மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கிலும், நீடித்த தொழில் வளர்ச்சியை உறுதி செய்யும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை விரைவாக ஏற்படுத்துவதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ரா துணை முதலமைச்சர் அஜித் பவார் விமான விபத்தில் உயிரிழந்த சம்பவத்திற்கு மோசமான வானிலையே காரணம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அவர், விமான விபத்துக்குமுன் நடைபெற்ற இறுதிக்கட்ட உரையாடல்களை சுட்டிக்காட்டி இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

மோசமான வானிலை நிலவும்போது விமானத்தை தரையிறக்கியதே விபத்துக்கு காரணம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அஜித் பவாரின் மறைவுக்கு குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மகாராஷ்ட்ராவில் மூன்று நாள் அரசு துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

கர்நாடகாவில் ஆளுநரின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டு கேட்கப்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீரமானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய பிஜேபி உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

ஆளுநர் தில்லியிலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளின் அடிப்படையில் செயல்படுவதாக மாநில அமைச்சர் திரு ஹெச் கே பாட்டீல் கூறியதையடுத்து, பிஜேபி உறுப்பினர் இந்த குற்றச்சாட்டை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பாகிஸ்தானில் மின்னணு குற்றங்கள் தடை சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை முடக்குவதற்கு இந்த சட்டம் பயன்படுத்தப்படுவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த சட்டத்தின்கீழ், மனித உரிமை ஆர்வலர் **Imman Mazari,** அவரது கணவர் மற்றும் வழக்கறிஞருக்கு **17** ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து இந்த போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

<<<<<<<>>>>>>>

டாக்கா — கராச்சி இடையேயான நேரடி விமான சேவை நாளை முதல் மீண்டும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பங்களாதேஷ் — பாகிஸ்தான் இடையேயான நேரடி விமான சேவை **13** ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தொடங்கப்பட உள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நேரடி விமான சேவை கடைசியாக **2012**-ஆம் ஆண்டு இயக்கப்பட்டதாகவும், இருநாடுகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களுக்கு பின்னர் இந்த விமான சேவை தொடங்கப்பட உள்ளதாக அந்த செய்திகள் கூறுகின்றன.

<<<<<<<>>>>>>>

இந்தியா — சவுதி அரேபியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அம்சங்களை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்கான கூட்டம் இன்று ரியாத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்கான திட்டங்களை வலுப்படுத்துவது குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

ஆஸ்திரேலியாவில் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இதுகுறித்த விவாதங்கள் நடைபெற்று வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவித்தபோதும், எப்போது செயல்படுத்துவது என்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக அந்த செய்திகள் மேலும் கூறுகின்றன.

<<<<<<<>>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

சூரியகுமார் யாதவ் 7-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------------

இந்தியா — நியூசிலாந்து இடையேயான நான்காவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தொடங்கியது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்துவரும் நியூசிலாந்து சற்றுமுன்வரை 4 ஓவரில், விக்கெட் இழப்பின்றி 45 ரன் எடுத்துள்ளது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரை முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.

-----------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15. 21-9 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Sholes Aidil -ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Anmol Kharb-**ம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே — சீனாவின் **Wushuang Zheng** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை **6-4, 6-3** என்ற செட் கணக்கில் இந்தியாவின் வசந்தி ஷிண்டே — ரோமேனியாவின் **Briana Szabo** இணையை வென்றது.

---------------

உலக டேபிள் டென்னிஸ் குழு சாம்பியன் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டி, லண்டனில் வரும் திங்கட்கிழமை தொடங்குகிறது.

-----------

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் ஒன்பதாவது சுற்றில் இந்தியாவின் பிரக்யானந்தா—**Arjun Erigaisi-**ஐ வென்றார்.

**<<<<<<<END>>>>>>**